துணை ஆணையர்(வவ), சரகம்-10 அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை- திருமதி.பா.சுபாஷினி, எம்.எஸ்சி(விவசாயம்).,
இடம்- 1ம் தளம், பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டிடங்கள்,
கிரிம்ஸ் சாலை, சென்னை - 600 006.

<u>ந.க.473/2016/அ1</u>

<u>நாள்- 21.07.2017</u>

பொருள் : நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 2013-14 மற்றும் 2014-2015 ஆண்டுகளுக்கான - தொகுதி - IV - தட்டச்சர்கள் - பணிவரன்முறை - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

துணை ஆணையர் (வவ) ... 28 JUL 2017 ... வரிவிதிப்பு வட்டம், சென்னை-50

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.967/ப்பி.எஸ்.டி-A/1/2016 நாள்.03.02.2016
2. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் நக.791/2016/அ2, நாள்.03.03.2016.
3. துணை ஆணையர்(வவ), சரகம்-10, நக.473/2016/அ1 நாள்.07.04.2016.

''''''''''''''''''''''''

<u>ஆணை :</u>

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி-IV 2013-14 மற்றும் 2014-2015 மூலம் தட்டச்சர்களாக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர்(வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் ஆணையின்படி இச்சரக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் ஆணையின் வாயிலாக இச்சரகத்திற்குட்பட்ட பின்வரும் அலுவலகங்களில் பணியமர்த்தப்பட்ட இரண்டு தட்டச்சர்களுக்கு அவரவர் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தனியாளர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தட்டச்சர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது..

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம் தகுதி காண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. இக்காலத்தில் இவர்கள் கணிப்பொறி பயிற்சி (Office Automation) மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

| வ. எண் | பெயர் | அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | செல்வி.கு.நந்தினி<br>தட்டச்சர் | உதவி ஆணையர் (வவ)<br>அண்ணாநகர் வரிவிதிப்பு வட்டம் | 21.04.2016 மு.ப. |
| 2 | திரு.மா.நந்தகுமார்<br>தட்டச்சர் | உதவி ஆணையர் (வவ)<br>அம்பத்தூர் வரிவிதிப்பு வட்டம் | 13.04.2016 மு.ப. |

இந்த பணிவரன்முறை ஆணையானது தொகுதி -IV தேர்வு 2013-14 மற்றும் 2014-2015 இப்பதவிகள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பினைப் பொறுத்து மாறுதலுக்குட்பட்டது.

ஒம்/-பா.சுபாஷினி,
துணை ஆணையர் (வவ),
சரகம் - 10, சென்னை-6.

<u>பெறுநர் :-</u>

தனியாளர்கள்
(உரிய உதவி ஆணையர்(வவ) அலுவலகம் மூலமாக)

<u>நகல் :-</u> 1. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம்,
அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பணியாளர் தொகுப்பு கட்டு
3. உதிரி - 1

//உண்மை நகல்//

26/7/17
மேலாளர்

26/7/17